# சர்வவியாபி
SARVA VIABI

MISSION PRESS 1840
PONDICHERRY

ESTD:1.3.1907
(Year-115)

31-07-2022 | சமய வளர்ச்சி சமுதாய மறுமலர்ச்சி | 1 | சுபகிருது வருடம் (ஆடி 15) | வருட சந்தா ₹ 200 தனிப்பிரதி ₹ 6

புத்தகம் 59 | இதழ் 30 பக்கம்-12


e-mail:missionpress48@gmail.com
e-mail:missionpress48@yahoo.com
Ph: 0413/ 2334360

ஆசிரியர் : பேரருள்பணி ஆ. அருளானந்தம்
துணை ஆசிரியர் : அருள்பணி L.ஆரோக்கியதாஸ்


# இயற்கையின் அழுகுரலைக் கேட்போம் – திருத்தந்தை



**படைப்பின் வேதனையான அழுகுரல்களைக் கேட்டு, நாம் மனமாற்றம் பெற்று, நமது வாழ்க்கை முறைகளையும், அழிவுதரும் செயல்பாடுகளையும் மாற்றிக் கொள்ள வேண்டும்" என்று, செப்டம்பர் மாதம் முதல் நாள் கொண்டாடப்படவிருக்கிற படைப்பைப் பாதுகாக்கும் உலக இறைவேண்டல் நாளுக்காக அனுப்பியுள்ள செய்தியில் அழைப்புவிடுத்துள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.**




"படைப்பின் குரலை மனிதர்களாகிய நாம் கேட்கக் கற்றுக்கொண்டால், அந்தக் குரலில் நம் அன்பான படைப்பாளரைப் புகழ்ந்து பாடும் ஓர் இனிமையான பாடலை கேட்கலாம். இருப்பினும் அந்தப் பாடலில் வேதனை மிகுந்த ஐந்துவிதமான அழுகுரல்களும் சேர்ந்துள்ளன. இயற்கை ஒருவித அதிருப்தியில் இருப்பதை நம்மால் உணர முடியும்.

**முதலாவது:**நம் பூமித் தாய் கதறி அழுகிறாள், நமது நுகர்வு கலாச்சாரத்தின் அத்துமீறல்களுக்கு இரையாகி அவள் அழுவதுடன், நம் தவறான பயன்பாடுகளுக்கும் அவளது அழிவுக்கும் முற்றுப்புள்ளி வைக்கும்படி நம்மைக் கெஞ்சுகிறாள்.

**இரண்டாவதாக:** புவியிலுள்ள வெவ்வேறு உயிரினங்கள் அனைத்தும் கதறி அழுகின்றன, குரலெழுப்ப முடியாத எண்ணற்ற உயிரினங்கள் அழிந்து வருவதோடு அவற்றின் புகழ்ச்சிப் பாடல்கள் அனைத்தும் மௌனமாக்கப்படுகின்றன.

**மூன்றாவதாக:** கதறி அழும் ஏழைகளும் நம்மிடையே இருக்கிறார்கள். காலநிலை நெருக்கடிக்கு ஆளான இத்தகைய ஏழை மக்கள், வறட்சி, வெள்ளம், சூறாவளி மற்றும் வெப்பக் காற்றின் தாக்கத்தை இன்னும் தீவிரமாக உணர்ந்தவர்களாய் வேதனைக் குரல்களில் கதறி அழுகிறார்கள்.

**நான்காவதாக:** பூர்வீக மக்களின் சகோதரர் சகோதரிகளும் கதறி அழுதுக் கொண்டிருக்கின்றனர், கொள்ளையடிக்கப்படும் பொருளாதார நலன்களின் விளைவாக, அவர்களின் மூதாதையர் நிலங்கள் எல்லாப் பக்கங்களிலும் ஆக்கிரமிக்கப்பட்டு அழிக்கப்பட்டு வருவதால் அவர்களின் அழுகுரல்கள் விண்ணை நோக்கி எழுகின்றன.

**ஐந்தாவதாக:** சுயநலச் செயல்பாடுகளால் அச்சுறுத்தப்பட்டுள்ளதை உணர்ந்து, இன்றைய நம் குழந்தைகளும் இளையோரும் கதறி அழுகிறார்கள், சுற்றுச்சூழல் சீர்கேட்டைத் தடுக்கவும் அல்லது குறைந்தபட்சம் அதனைக் கட்டுப்படுத்தவும் நம்மால் முடிந்த அனைத்தையும் செய்யுமாறு பெரியவர்களாகிய நம்மை ஆர்வத்துடன் அவர்கள் கேட்கிறார்கள்.

**"மனம் மாறுங்கள், ஏனெனில் விண்ணரசு நெருங்கி வந்துவிட்டது" (மத் 3:2)** என்ற இயேசுவின் வார்த்தைகளை ஏற்று, படைப்பின் வேதனையான அழுகுரல்களைக் கேட்டு, மனமாற்றம் பெற்று, நமது வாழ்க்கை முறைகளையும், அழிவுகரமான செயல்பாடுகளையும் மாற்றிக் கொள்ள வேண்டும், இந்த மனமாற்றம் தனிப்பட்ட விதத்திலும் குழும நிலையிலும் நிகழவேண்டும்.

**காலநிலை மாற்ற மாநாடுகள்:** 2022 நவம்பர் மாதம் எகிப்தில் நடைபெறவுள்ள காலநிலை மாற்றம் தொடர்பான COP27 மாநாடு, பாரிஸ் ஒப்பந்தத்தை திறம்பட செயல்படுத்துவதை ஊக்குவிப்பதில் அனைவரும் இணைவதற்கான அடுத்த வாய்ப்பை வழங்கவிருக்கிறது. அவ்வாறே, டிசம்பர் மாதத்தில் கனடாவில் நடைபெறவுள்ள பல்லுயிர் பெருக்கம் தொடர்பான COP15 உச்சி மாநாடு, சுற்றுச்சூழல் அமைப்பு மற்றும் உயிரினங்களின் அழிவைத் தடுக்க புதிய பலதரப்பு ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்வதற்கான குறிப்பிடத்தக்க வாய்ப்பை அரசுகளுக்கு வழங்கும்" என்றும் நம்பிக்கைத் தெரிவித்துள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

"சுரங்கம், எண்ணெய், வனவியல், மனை விற்பனை, வேளாண்வணிகம் போன்ற தொழில்கள் வழியாக, காடுகள், ஈரநிலங்கள் மற்றும் மலைகள் ஆகியவற்றை அழிப்பதையும், ஆறுகள் மற்றும் கடல்களை மாசுபடுத்துவதையும், உணவை நஞ்சாக்குவதையும் நிறுத்தவும் கடவுளின் பெயரால் கேட்டுக்கொள்கிறேன்" என்று விண்ணப்பித்து தனது செய்தியை நிறைவு செய்துள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

ஆசிரியர் பேனா...

# குடிகளின் எதிர்பாாப்பு



**வாழ்த்துகிறோம்:** புதிய குடியரசுத் தலைவராக தேர்வு செய்யப்பட்டுள்ள மாண்புமிகு திரௌபதி முர்மு ('புடி') அவர்களுக்கு நம் வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம். நாட்டின் 75-வது சுதந்திர ஆண்டு கொண்டாடப்படும் வேளையில் பழங்குடியினத்தைச் சேர்ந்த ஒருவர் குடியரசுத் தலைவராக தேர்ந்தெடுக்கப் பட்டிருப்பது ஜனநாயகத்தின் சாதனை என்று சொல்லலாம்? இதனால் பழங்குடியினர், ஏழைகள், த-த்துக்கள், விளம்புநிலை மக்களின் வாழ்வு ஏற்றும் பெற வாய்ப்பாக இது வழிவகுத்தால் பெருமைக்குரியதாக கணிப்புச் செய்யலாம்.

இச்சாதனை பெருமைக்குறியது என்று சொல்ல 5 ஆண்டுகள் பொறுமையோடு காத்திருப்போம். கடவுளின் பெயரால் பதவி உறுதிமொழி ஏற்ற புதிய குடியரசு தலைவர், நாட்டின் அரசமைப்புச் சட்டத்தையும் மற்ற சட்டங்களையும் பாதுகாப்பேன் என்று உறுதியேற்றிருக்கிறார்.

**இந்திய ஒருமைப்பாடு:** "'ஒரே பாரதம், சிறந்த பாரதம்' என்ற இலக்கை நோக்கி நாடு வீறுநடையிட்டு வருகிறது" (தினமணி 26 ஜுலை 2022) என்று 15வது குடியரசு தலைவர் சொல்- பெருமைபடுகின்றார். மொழி, இனம், சாதி, மதம் என்ற பல வண்ண மலர்கள் பூத்துக் குலுங்கும் ஒரே தோட்டமாக பாரதம் சிறந்து விளங்கவேண்டும் என்ற மக்களின் ஏக்கம் அவர் குறிப்பிட்ட இலக்காக இருக்கட்டும். இந்திய ஒருமைப்பாட்டினை வலுப்படுத்தும் காரணிகளுக்கு ஆபத்து வரும்போது முதல் குடிமகனா(ளா)க குரல் கொடுத்து அவற்றை பாதுகாப்பார்கள் என்று அவர்மீது நம்பிக்கை வைப்போம்.

**ஜனநாயகம் காப்பார்?** "சமையல் எரிவாயு உருளை விலையேற்றம், கோதுமை, மோர் உள்ளிட்ட பல்வேறு அத்தியாவசிய பொருட்களின் மீதான ஜிஎஸ்டி வரி விதிப்பு" (தினமலர் 26-7-2022, 4 காங்கிரஸ் எம்.பிக்கள் கூட்டத் தொடர் முழுவதும் நீக்கம்) போன்று மக்களை பாதிக்கும் திட்டங்கள் மீது மக்கள் அவையில் விவாதம் நடத்த எதிர்க்கட்சிக்கும், ஆளும் கட்சிக்கும் ஆலோசனை, அறிவுரை வழங்கி ஜனநாயகத்தைக் காத்திட நாட்டின் முதல் குடிமகன் (ள்) துணியோடு செயல்படுவார்கள் என்று நம்பிக்கைக் கொள்வோம்.

**நம்பிக்கை நட்சத்திரம்:** கருப்புப் பணத்தை கையகப் படுத்தி குடிமக்கள் ஒவ்வொருவர் வங்கிக் கணக்கிலும் 15 லட்சம் இருப்பு வைப்போம் என்பது போன்ற இலவச தேர்தல் வாக்குறுதிகளை தகர்த்திடும் சம்மட்டியாக இருந்து, ஜனநாயகத்தை காத்திடும் நம்பிக்கை நட்சததிரமாக மேன்மைமிகு முர்மு அவர்கள் செயல்படுவது அவசியம். "...மக்களின் வாக்குகளைப் பெறுவதற்காக அரசியல் கட்சிகள் அறிவிக்கும் இலவசங்களால் நாட்டின் எதிர்காலத்திற்கு ஆபத்து (தினமணி 26-7-2022) என்று பிரதமர் சொல்வது சரியே. இந்த இலவச காலச்சாரத்தை ஒழித்து, அத்தியாவசிய பொருட்கள் தடையின்றி நியாய விலைக்கு மக்களுக்கு கிடைக்கச் செய்ய மத்திய மாநில அரசுக்களுக்கு குடியரசு தலைவர் வழிகாட்டுவது வளமையான இந்தியா உருவாக துணைசெய்யும். இது சார்பாக உச்ச நீதிமன்றம் எழுப்பியுள்ள கேள்வியை கருத்தில் கொள்வது அவசியம். (தினமணி 27-7-2022, அரசியல் கட்சிகளின் இலவச திட்ட வாக்குறுதிகள்...)

**சமுதாய ஜனநாயகம்:** அரசியல் ஜனநாயகம் மட்டும் போதாது; சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்ற வார்த்தைகள் வடிவான சமுதாய ஜனநாயகம் அரசியல் ஜனநாகத்திற்கு அடித்தளமாக வேண்டும். சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்ற மதிப்பீடுகள் செயல்படாத கருத்தியல் என்று தவறாக புரிந்து கொள்ளக் கூடாது என்பது டாக்டர் அம்பேத்கரின் அவர்களின் கருத்து. இக்கருத்தினை மக்களும் அரசியல் கட்சிகளும் உள்வாங்கி செயல்பட குடியரசு தலைவர் நாட்டை வழிநடத்துவார்கள்.

**திறனறிந்தான்:** அறநெறி உணர்ந்தவராகவும், சொல்லாற்றல் கொண்டவராகவும், செயல்திறன் படைத்துவராகவும் இருப்பவரே ஆலோசனைகள் கூறக்கூடிய துணையாக விளங்க முடியும்.

"அறனறிந்து ஆன்றமைந்த சொல்லான்எஞ் ஞான்றுந்
திறனறிந்தான் தேர்ச்சித் துணை" (குறள் 635)

என்ற வள்ளுவரின் கருத்திற்கேற்ற ஆலோசகராக புதிய குடியரசு தலைவர் செயல்பட்டால் நாட்டில் நிலவும் அவலங்கள் மாறி, அரசியல்வாதிகளின் சூழ்ச்சிகள் ஒழிந்து நாட்டு மக்கள் அமைதியையும், சகோதரத்துவத்தையும் சுவைத்து இன்புற முடியும்.

**பாதிக்கப்பட்டோருக்காக குரல்:** 1950ல் குடியரசுத் தலைவர் ஆணை 50 பத்தி 3ஐ ரத்துச் செய்து, கிறிஸ்தவம், இஸ்லாம் மதத்தைச் சார்ந்த பட்டிய-ன மக்களுக்கு மறுக்கப்பட்ட சலுகைகள், உரிமைகள் கிடைக்க ஒன்றிய அரசு முடிவெடுக்க அறிவுறுத்துவார்கள் என எதிர்பார்ப்போம். இது சார்பாக உச்ச நீதிமன்றம் கேட்டிருக்கும் விளக்கத்தை ஒன்றிய அரசு சமர்பிக்க, குடியரசு தலைவரின் அறிவுறுத்தல் பதிக்கப்பட மக்களுக்கு நன்மை பயக்கும். அரசமைப்புச் சட்டத்தை பாதுகாக்க உறுதியளிக்கும் முதன்மைக் குடி மகன் (ள்) பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்கச் செய்தல் மக்களின் மனங்களிலே குடிகொள்வார்.

**வாழ்வியல் தத்துவம்:** பகிர்ந்து வாழ்தலும், மற்றவர்மட்டில் அக்கறை கொள்வதும் இந்திய வாழ்வியல் தத்துவம், அதனை நாம் பின்பற்றி வளமையான எதிர்காலத்தை உருவாக்க வேண்டும் (The Hindu 25-7-2022/ Vice President release biography of ISKCON founder). இந்த இந்திய வாழ்வியல் தத்துவத்திற்கு வழிகாட்டியாக திருவிவி-யம் இருப்பதை நினைவிற் கொள்வோம். கி.மு.2ம் நூற்றாண்டில் வாழ்ந்த தோபித் என்பவர் தம் மகனுக்கு தரும் பின்வரும் அறிவுரையில் வாழ்வியல் தத்துவத்தை புரிந்து கொள்ளலாம். "மகனே, உன் வாழ்நாள் முழுவதும் ஆண்டவரை நினை... உன் வாழ்நாள் முழுவதும் நீதியைக்க கடைபிடி, அநீதியின் வழியில் செல்லாதே... ஏழை எவரிடமிருந்தும் உன் முகத்தை திருப்பிக் கொள்ளாதே... உனக்குப் பிடிக்காத எதையும் பிறருக்கு செய்யாதே. உன் உணவில் ஒரு பகுதியைப் பசித்திருப்போருக்கு கொடு. உன் உடையில் ஒரு பங்கை ஆடையற்றிருப்போருக்கு வழங்கு. தேவைக்கு மேல் உன்னிடம் உள்ளதையெல்லாம் தருமம் செய்துவிடு. தருமம் கொடுப்பதற்கு முகம் கோணாதே" (தோபித் 4:5-16) இப்பண்புகள் கொண்ட தர்ம சிந்தனையால் பிறப்பெடுக்கும் இந்திய சமத்துவ சகோதரத்துவ சமுதாயத்தை படைத்திட அரசை குடியரசு தலைவர் வழிகாட்டுவது அவசியம்.



07-08-2022

# குறையாத செல்வம்



அருள்திரு. J. இருதயராஜ்
உதவி பங்குத்தந்தை, இருப்புக்குறிச்சி

சாஞா 18:6-9, எபி 11:1-2,8-19 லூக் 12:32-48

ஓர் ஊரில் ஆலய புனரமைப்பு பணிகள் நடைபெற்றுக்கொண்டிருந்தன. அப்பொழுது ஆலயத்தின் கோபுரத்தில் வைப்பதற்கான ஒரு சிலையை சிற்பி ஒருவர் செதுக்கிக் கொண்டிருந்தார். அவ்வழியே சென்ற ஒருவர் அதைப் பார்த்துக் கொண்டிருந்தார். சிற்பியை பார்த்து அந்த நபர் இரண்டு சிலைகள் வைக்கப்பட இருக்கின்றனவா? என்று கேட்டார். அதற்கு அவர் இல்லை என பதில் கூறுகின்றார். அப்படியானால் ஏன் இரண்டு சிலைகளை செதுக்குகின்றீர்கள்? ஏற்கனவே இதே மாதிரியான சிலை உங்கள் கை அருகில் புதியதாக உள்ளது. இப்பொழுதும் அதேபோல் புதியதாக செய்து கொண்டிருக்கின்றீரே ஏன் என்று கேட்டார். அதற்கு அந்த சிற்பி இதோ இங்கே செய்து வைக்கப்பட்டிருக்கிற சிலையில் ஒரு சிராய்ப்பு (கீறல்) இருக்கின்றது. எனவேதான் புதியதாக ஒன்றினை செதுக்கி கொண்டிருறேன் என்றார்.

அதற்கு அந்த நபர் அப்படி ஒன்றும் இல்லையே என்று சொல்-க்கொண்டே கூர்ந்து பார்க்கின்றார். கூர்ந்து பார்த்தபோது அதிலே ஒரு நூ-ழை அளவு கீறலைப் பார்த்துவிட்டு, இந்தக் கீறலுக்காகவா புதியதாக ஒன்றினை செய்கின்றீர். அதுவும் ஆலயத்தின் கோபுரத்தில் வைத்தால் யாருடையக் கண்ணுக்கும் இந்த சிறிய கீறல் தெரிய போவதில்லை. இதற்காக, புதியது ஒன்றை செய்கிறீரே என்று கேட்டதற்கு அந்த சிற்பி கூறிய பதில், அந்த பிழை எனக்குத் தெரியுமே, அதுமட்டுமல்ல, பிழை என தெரிந்த பிறகும் சரிசெய்யாமல் விட்டேன் என்றால், நாளுக்கு நாள் வளர்ந்து பெரியதாய் மாறும்; என்னுடைய வாழ்க்கை முறையும் முற்றிலும் தவறான பாதைக்கு சென்றுவிடும் என்றாராம்.

இயேசு கிறிஸ்துவில் பிரியமான சகோதர சகோதரிகளே இவ்வுலகில் வாழும்போது, இற்றுப்போகாத பணப் பைகளையும் குறையாத செல்வத்தையும் தேடிக் கொள்ளுங்கள், அங்கே திருடன் நெருங்குவதில்லை, பூச்சியும் அரிப்பது இல்லை (லூக் 12:33) என்று இயேசுவின் வார்த்தையை நமதாக்க இன்றைய இறைவாக்கு வழிபாடு நம்மைத் தூண்டுகிறது. இந்த அழியாத செல்வத்தைதான் சிற்பி தேடிக்கொள்கின்றார்.

**குறையாத செல்வம்:** நீங்கள் அவருடைய ஆட்சியைத் தேடுங்கள் அப்பொழுது இவை (உணவு, உடை, இருப்பிடம் மற்றும் நம்முடைய தேவைகள் அனைத்தும்) உங்களுக்குச் சேர்த்துக் கொடுக்கப்படும். ஆண்டவருடைய வார்த்தையை முழுமையாக கேட்டு ஆராய்ந்து அனுபவித்து செயல்படுதல், குறையாத செல்வமாக மாற்றம் பெறுகிறது. இதனைதான் இன்றைய வாசகங்கள் நமக்கு தெளிவுபடுத்துகின்றது. நாம் சேர்த்து வைக்க வேண்டிய செல்வங்கள்.

ஆண்டவருக்காக இதயக் கதவை திறப்பதற்கு எப்பொழுதும் காத்திருக்க வேண்டும். (லூக் 12:36).

அவரை எதிர்கொள்ள விழிப்பாய் இருத்தல் வேண்டும் (லூக் 12:37)

எப்பொழுதும் அவரை சந்திக்க (நேரம், காலம் கடந்து) தயாராக இருக்க வேண்டும் (லூக் 12:38).

ஆண்டவர் வந்து பார்க்கும்போது நம் பணியை சிறப்பாக செய்து கொண்டிருக்க வேண்டும் (லூக் 12:41)

எப்பொழுதும் தயாராக இருக்க வேண்டும் ஆண்டவரை பெற்றுக் கொள்வதற்கு குறையாத செல்வத்தை பெற்றுக் கொண்ட விவி-ய கதாபாத்திரங்கள்:

ஆபே-ன் காணிக்கை ஆண்டவரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. ஆண்டவருக்கு கொடுத்த தலையீறுகளை காணிக்கையாக கொடுத்து முழுமையான ஆசீர்வாதத்தை பெற்றுக் கொண்டார் (குறையாத செல்வம்) தொ.நூ 4:4).

ஏனோக்கு, நோவா, ஆபிரகாம் இவர்கள் அனைவரும் குறையாத செல்வத்தை தேடிக் கொண்டவர்கள் (இரண்டாம் வாசகம்).

தன்னுடைய பாதங்களை கழுவிய பாவியான பெண்ணை குறித்து ஆண்டவர் சீமோனிடம் இவர் செய்த பல பாவங்கள் மன்னிக்கப்பட்டன. ஏனெனில் இவர் மிகுதியாக அன்பு கூர்ந்தார் (லூக் 7:47).

சக்கேயு தன் நிலை உணர்ந்து ஆண்டவருக்காக தன்வாழ்வை மாற்றிக்கொள்ள நினைத்தபோது ஆண்டவர் இயேசு அவரை நோக்கி, இன்று இந்த வீட்டிற்கு மீட்பு உண்டாயிற்று (லூக் 19:9). (குறையாத செல்வம்)

கானானியப் பெண்ணின் நம்பிக்கை குறித்து ஆண்டவர் சொல்லுகிற வார்த்தை அம்மா, உமது நம்பிக்கை பெரியது. நீர் விரும்பியவாறே உமக்கு நிகழட்டும் என்றார் (மத் 15:27) (நிறையாத செல்வம்)

ஐயா, நீர் என் வீட்டிற்குள் அடியெடுத்து வைக்க நான் தகுதியற்றவன், ஆனால் ஒரு வார்த்தை சொல்லும் என் பையன் நலமடைவான் (மத் 8:8).

அன்று நூற்றுவ தலைவனின் வார்த்தை ஆண்டவருடைய பார்வையில் மதிப்பு மிகுந்ததாய் மாறியதோடு உயரிய அழியாத செல்வமாகிய இயேசுவை உரிமைபேறாக பெற்றுகொண்டார்.

மிகவும் எல்லாருக்கும் பிடித்த புனித பவுலடியாரின் வார்த்தை ஆண்டவரின் பொருட்டு எல்லா செல்வத்தையும் வீணாகக் கருதுகிறேன். இயேசுவே ஒப்பற்ற செல்லும், குறையாத செல்வம், சேர்க்க வேண்டிய செல்வம், எல்லாரிடமும் இருக்க வேண்டிய செல்வம், இதனை புனித பவுலடியார் வாழ்ந்து காண்பித்தார் (பி- 3:8).

**நம் வாழ்வுக்கு:** நம்முடைய வாழ்க்கையே நிறைவான, அழியாத நிரந்தர மகிழ்ச்சியை தரக்கூடிய செல்வத்தை சேர்த்து வைப்பதே ஆகும். அந்த நோக்கம் நிறைவேற வேண்டுமெனில் விவி-ய கதாபாத்திரங்கள் சிலவற்றை முன்மாதிரியாக கொண்டு வாழ்வை சீரமைக்க தயாராக இருக்க வேண்டும்.

ஆண்டவர் இயேசுவை பற்றிக் கொள்ளத் தடையாய் இருக்கின்ற செயல்பாடுகளை களைந்து எறியவேண்டும். இருளின் ஆட்சிக்குரிய செயல்பாடுகளை களைந்துவிட்டு தூய உயிருள்ள ப-யாக ஆண்டவரிடம் நமமை ஒப்படைக்கவேண்டும் (உரோமை 12:1).

அரியணையில் வீற்றிருக்கும் அரசர் நம்மை பார்த்து வாருங்கள் என் தந்தையின் ஆசி பெற்றவர்களே என்று ஆண்டவர் நம்மை அழைக்கும்படி நம் வாழ்வை செம்மை படுத்துவோம் (மத். 25:31).

குறையாத செல்வமுடன்
மகிழ்ச்சியாக வாழ்வோம்.

# வான் வீட்டின் திறவுகோல்

–A. யூஜின், காரைக்கால்

பாட்டி என்னை உனக்குப் பிடிக்குமா?

ஏன்டா உனக்கு திடீர் சந்தேகம்?

இல்லை பாட்டியம்மா! உனக்குப் பிடிக்குமென்று நான் எது வாங்கிக் கொடுத்தாலும் சரியா சாப்பிடாம வைத்து விடுகிறாய்! பிடிக்கலயா பாட்டிமா?

என்னடா அதெல்லாம் சொல்லு?

பாட்டிமா! போன வாரம் நான் வாங்கி வந்தது ஃபிரைட் ரைஸ்! நேற்று வாங்கி வந்தது பீட்சா! நீ பாதி கூட சாப்பிடல. அதான் கேட்டேன்.

போடா! எனக்கு அதெல்லாம் உள்ளே போகலடா! எனக்கு எது பிடிக்குமென்று நீ கேட்டால் என்ன?

ஒரு பாட்டியும் பேரனும் ஆலய நுழைவு வாயில் அருகில் மர நிழ–ல் நின்று சப்தமாக பேசிக் கொண்டது, ஆலயத்துள் நுழைந்து கொண்டிருந்த எனக்கு தெளிவாக கேட்டது. எனக்கு என்ன பிடிக்குமானு கேட்டாயா? நான் ஆலயத்துள் நுழைந்த பின்பும் இந்தக் கேள்வி மீண்டும் மீண்டும் என் காதுகளில் ஒ–த்துக் கொண்டேயிருந்தது. உள்ளே நுழைந்தேன். சிலுவையை, நற்கருணை ஆண்டவரை உற்றுப் பார்த்தேன். அங்கிருந்தும் இந்தக் கேள்வி வந்ததுபோல தோன்றியது. இயேசுவே உமக்கு என்ன பிடிக்கும். என் கையில் வைத்திருந்த இரண்டு மெழுகுவர்த்திகள் பொருத்தமற்றதாகத் தோன்றியது, இயேசு உம் ஆலயத்தில் ஏற்றுப்படும் மெழுகுவர்த்திகளும், போடப்படும் மாலைகள் மட்டும் உமக்கு போதுமா? பிடிக்குமா?

அன்று இரவு என் மனது எனக்கு பதில் கொடுத்தது.

இயேசு தூயவராய் இருப்பதால், நீயும் தூயவராய் இரு. அவருக்குப் பிடிக்கும்,

இயேசு இரக்கமுள்ளவராய் இருப்பது போல நீயும் பிறருக்கு இரக்கம் காட்டு. அவருக்குப் பிடிக்கும்.

இயேசு அன்பின் ஊற்றாய் இருப்பது போல நீயும் அன்பு செய்! அவருக்குப் பிடிக்கும்.

இயேசு விரும்பும் அன்பு எப்படிப்பட்டது. சிந்திக்க ஆரம்பித்தேன். பெரியவர்கள், அன்பை உணவு தரும் அன்பு (இரக்கம், கருணை) உணர்வு பகிரும் அன்பு (பாசம், காதல்), உயிர் தரும் அன்பு (தியாகம்) என்று வகைப் படுத்தியுள்ளார். அன்பு என்று என் அருகில் இருப்பவன் எல்லா நிலையிலும் நன்றாக இருக்க வேண்டும் என்று நான் விரும்பும் உள் உணர்வு. இதைத்தான் ஆண்டவர் இயேசு நீ உன்னை அன்பு செய்வது போல பிறரையும் அன்பு செய் என்று கூறுகிறார்.

புனித பவுலடியார் அன்பின் உட்கூறுகளை பற்றி விரிவாக விளக்குகிறார். (கொரி 13.4–7) அவரது கூற்றுப்படி அன்பு பொறுமையுள்ளது. நன்மை செய்யும் பொறாமைப்படாது, தற்புகழ்ச்சி கொள்ளாது, இறுமாப்பு அடையாது, இழிவானது செய்யாது, தன்னலம் நாடாது, எரிச்சல்படாது, தீங்கு நினைக்காது, அனைத்தையும் பொறுத்துக் கொள்ளும்; அனைத்தையும் உறுதியாக நிற்கும் என்பது போன்ற 15 அன்பின் உட்கூறுகளை பட்டிய–ட்டுக் காட்டுகிறார்.

நாம் எல்லாருமே அன்பு என்ற உணர்வை ஆழ்ந்து அனுபவிப்பதை விட மேலோட்டமான அளவில் அனுபவிப்பது போதும் என்ற நிலையில் தான் வாழ்கின்றோம். கடமையாக, கட்டாயமான ஒன்றாக அன்பு செலுத்துவது பலருக்கு வழக்கமாகிவிட்டது. பிறரை அன்பு செய்கிறேன். ஆனால் என்னைப் போல பிறரை அதிகமாக அன்பு செய்வதோ என்னால் முடியாது அது தேவையுமில்லை என்ற மனநிலையில் பலர் உள்ளனர்.

பவுலடியார் குறிப்பிட்ட உட்கூறுகளை மேலும் ஆய்வு செய்தால் அன்பின் உட்கூறுகள் இன்னும் அதிக ஆழமானவை.

விட்டுக்கொடுத்தல், குறை நிறைகளுடன் பிறரை ஏற்றுக்கொள்ளுதல், மன்னித்தல், மன்னிப்பு கேட்டல், ஆறுதல் கொடுத்தல், சமாதானம் செய்தல் பிறர் வ–தாங்குதல், வழிகாட்டுதல், பயப்படாதே உனக்கு நான் இருக்கிறேன் என்ற உணர்வை கொடுத்தல் உதவுதல், அனைத்தையும் பகிர்தல், நன்றி சொல்லுதல் போன்றவை கூட அன்பின் உட்கூறுகள்தான், இவைதான் வாழ்வை இனிமையாக மாற்றுகின்ற காரணிகள். எனவேதான் பவுலடியார் அன்பே அனைத்திலும் சிறந்தது என்று கூறுகிறார். எப்போது ஒரு மனிதன் தன்னிடத்தில் நான் பெரியவன் என்ற உணர்வு மேலோங்குகிறதோ அங்கே அன்பு மறைந்து போகின்றது. சுயநலம், சுயவிருப்பு, வெறுப்பு அன்பு கொல்லும் காரணிகளாகின்றன. எல்லா நற்செயல்களிலும், உறவுகளை கட்டமைப்பதிலும், அன்பே அடிக்கல்லாக மூலைக்கல்லாக அமைகின்றது.

ஒவ்வொரு மனிதன் வாழ்விலும் கடைசி நாள் வரும், அன்று அவனது அன்புச் செயல்கள் அளவிடப்படும். அந்த செயல்களே அவன் வான்வீட்டில் நுழைய திறவுகோலாக மாறும், அன்பில் வாழ முயல்வோம்.

## ஆழ்ந்த செபம் கலந்த இரங்கல்

மேல்நாரியப்பனூர் பங்கில் உதவியாக பணியாற்றும் அருட்தந்தை S.P. ஆரோக்கியதாஸ் அவர்களின் மூத்த சகோதரர் **திரு. S. பால்ராஜ்** (வயது 46) அவர்கள் 24.07.2022 அன்று இறைவனடி சேர்ந்தார். 25.7.2022 அன்று சொந்த ஊரான மையனூரில் நல்லடக்கம் செய்யப்பட்டது. சகோதரரின் இழப்பால் வாடுகின்ற அருட்தந்தை அவர்களுக்கும் மற்றும் அவரது குடும்பத்தாருக்கும் ஆழ்ந்த செபம் கலந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.



## உள்ளம் தேடும் உளவியல்

- அருள்சகோதரி **டெரன்ஸ்மேரி,** FIHM
கடலூர்



**கருத்துரை - 16**

# மண்ணிலே மறைந்திருக்கும் மறைபொருள்!

➢ கடவுளின் முதல் சொற்பொழிவிலிருந்து...

❖ **மண்ணகத்திற்கு நான்**
**அஸ்திவாரம் (கால்கோள்)**
**இடும்போது நீ எங்கு இருந்தாய்? (யோபு 38:4)**

ஆண்டவரின் **தெய்வீக வினா** இங்கு **வியப்பு நிறைந்த சில உண்மைகளை** நமக்கு வெளிப்படுத்துகிறது.

**கருவிலிருக்கும் சிசுவிற்கு அதன் தாய் அஸ்திவாரமாய் இருக்கின்றாள்.**

**முளைக்கின்ற தாவரத்திற்கு அதன் வேர்கள் அஸ்திவாரமாய் இருக்கின்றது.**

**பொழிகின்ற மழைக்கு மேகம் அஸ்திவாரமாய் இருக்கின்றது.**

இவைகளை எல்லாம் உள்ளடக்கிய பூமியின் அஸ்திவாரத்தை மனிதனால் காண முடிகிறதா? மண்ணகத்தைத் தாங்கிப்பிடித்திருக்கும் அந்த அஸ்திவாரம் எங்குள்ளது?

**இதுதான் மறைந்திருக்கும் மறைபொருளோ?**

❖ **மண்ணகத்திற்கு**
**அளவு குறித்தவர் யார்? (யோபு 38:5)**

ஆழம், அகலம், உயரம், நீளம், பரப்பளவு என சரியான விகிதத்தில் அளவுகள் குறிக்கப்பட்டு கட்டப்பட்டுள்ளதுதான் இந்த பூமி என்பதை, இறைவனது இந்த வினா நமக்குத் தெளிவுபடுத்துகிறதன்றோ?

என்னே விந்தை!

பரந்து விரிந்த இந்த பூமியைக்கூட இறைவன் அளந்து அல்லவா உருவாக்கியிருக்கின்றார்?

இதுதான் பூமியின் **மறைபொருளோ?** படைப்புப் பொருட்கள் ஒவ்வொன்றையும் இறைவன் மிகத்துல்லியமாக அளவெடுத்து படைத்திக்கிறார் என்பதை இதிலிருந்து நாம் அறிகின்றோம் அன்றோ?

❖ **அதன்மேல் நூல் பிடித்து**
**அளந்தவர் யார்? (யோபு 38:5)**

என்னே விந்தை!

இறைவன் எவ்வளவு நுணுக்கமானவர்! நம்மையும் அப்படித்தானே மிகத் துல்லியமாக, மிக நுணுக்கமாக படைத்திருப்பார்!!!

இப்படி **நம்மில் மறைந்திருக்கும் மறைபொருளும்** ஏராளம் இருக்கும் அன்றோ!

❖ **எதன்மேல் அதன் தூண்கள்**
**ஊன்றப்பட்டன? அல்லது**
**யார் அதன் மூலைக் கல்லை**
**நாட்டியவர்? (யோபு 38:6)**

இந்த பூமி என்ற மாபெரும் கட்டிடத்திற்கு மூலைக் கல்லை நாட்டியது யாரோ? என்ற ஆண்டவரது வினாவிலிருந்து நமக்குப் புலப்படுகிறது, ஆண்டவர்தாம் இந்த பூமிக்குரிய மூலைக் கல்லை நாட்டியிருக்கிறார் என்று. அஸ்திவாரத்திற்கான தூண்கள் எங்கே ஊன்றப்பட்டுள்ளது? அதன் மூலைக் கல் எங்கே நாட்டப்பட்டுள்ளது?

இவைகள் எல்லாம் இப்பூமியில் **மறைந்திருக்கும் மறைப்பொருள்** அன்றோ?

❖ **அப்போது வைகறை விண்மீன்கள்**
**ஒன்றிணைந்து பாடின!**
**கடவுளின் புதல்வர் களிப்பால்**
**ஆர்ப்பரித்தனர்.! (யோபு 38:7)**

ஆண்டவர் பூமிக்கான மூலைக் கல்லை நாட்டியபோது, மிக அழகாய் காட்சிதரும் வைகறை விண்மீன்கள் அனைத்தும் ஒன்றிணைந்து பாடியதாம். கடவுளின் புதல்வர்கள் (திருத்தூதர்கள்) அக்களிப்பால் மகிழ்ந்து, களிகூர்ந்து, ஆர்ப்பரித்தனராம்.

ஆண்டவரால் நிகழ்த்தப்பட்ட, பூமிக்கான இந்த அடிக்கல் நாட்டுவிழாவாகிய இந்த ஆனந்த வைபவம் கண்கொள்ளாக் காட்சியாக அல்லவா இருந்திருக்கும்!

• **மனிதனில் கருவாகும் மனித உடல்,**
**மண்மீது இன்ப, துன்பங்களுடன்**
**இணைந்து வாழ்கிறது.**
**உயிர் பிரிந்த பின்னரோ**
**மடிந்து பிணமாகி மண்ணிற்குள்**
**புதைக்கப்பட்டு சருகாகிறது.**

இந்த இடைப்பட்ட காலம் முழுதும் பூமிக்கு அடியில் உள்ள தங்கம், வைரம், உலோகம், எண்ணெய், நீர், போன்றவற்றையும், பூமிக்கு மேலே உள்ள மலை, குன்று, கடல், நிலங்கள், காற்று, தாவரங்கள், விலங்குகள், போன்ற எல்லாவற்றையும், பயன்படுத்த உரிமை பெற்றிருக்கின்றோம்.

இப்படி ஒரு உரிமையைத் தந்த ஆண்டவரை புவிவாழ் மக்கள் அனைவரும் ஒன்றுகூடி, **வைகறை விண்மீன்களைப் போன்றும், கடவுளின் புதல்வர்கள் போன்றும்,** மகிழ்ந்து, அக்களிப்பால் துள்ளி, ஆர்ப்பரித்து, பாடிக்கொண்டேயிருக்க வேண்டாமா!

**நம்மிலும், பூமியிலும், மறைந்திருக்கும் மறை பொருளை எண்ணி, எண்ணி,** அதற்கு சொந்தக்காரராகிய இறைவனை **முப்பொழுதும், எப்பொழுதும் போற்றி, புகழ்ந்து** கொண்டேயிருக்க வேண்டுமல்லவா?

• **மனிதன் இப்புவியிலே வாழ**
**தோற்றத்தைக் கொடுத்து,**
**காற்றையும், நாற்றையும்,**
**ஆற்றையும், ஊற்றையும்,**
**ஆற்றலையும் அளித்த,**
**அற்புத ஆண்டவரை ஏற்றிப்,**
**போற்றிக்கொண்டேயிருக்க வேண்டும்**
**என்பதுதானே இங்கு யோபு ஆகமத்தின்வழி**
**ஆண்டவரின் முதல் சொற்பொழிவு**
**உணர்த்தும் கூற்றாகிறது !!!**

- தொடரும்....



# வசந்தமாய் வாழ்வு

-அருள்பணி. **M. ஜான் கென்னடி,**
முதல்வர் பொறுப்பு, புனித அந்தோணியார் பள்ளி, நெய்வேலி.

## 79. தீர்ப்பிடாதே

ஒருவன் கொலை, கொள்ளை முதலிய பாவங்களுக்கு பெயர் போனவன். அவனுக்கு புத்தரைப் பார்க்க வேண்டும் என்ற ஆசைத் தோன்றியது. அவனைப் பற்றி அவ்வூரில் அனைவருக்கும் தெரியும். எனவே, தன்னை மடத்திற்குள் அனுமதிக்கமாட்டார்கள் என்பதால், சுவர் ஏறிக் குதித்து உள்ளேச் சென்றான். ஆனால் சாரிபுத்ரன் என்ற சீடனிடம் அகப்பட்டுக்கொண்டான். ‘நான் திருடன் இல்லை. புத்தரிடம் சீடனாக வந்தேன். எனக்கு எல்லாம் வெறுத்து விட்டது. பாவங்களிலிருந்து விடுபட்டு, பிராயச்சித்தமாக, சந்நியாசியாகி மக்கள் தொண்டில் ஈடுபட வந்தேன்’ என்று அவன் சொல்லக் கேட்டு சாரிபுத்ரன் திகைப்புற்றான். இருந்தபோதிலும், துறவு பூண அவனுக்குத் தகுதி இருக்கிறதா! என்று சாரிபுத்ரன் ஜாதகம் கணித்துப் பார்க்க ஆரம்பித்தான். ஆனால், அவன் முன்னைய பிறவிகளிலும் படு மோசமானவனாகவே இருந்திருக்கிறான். எந்தப் பிறவியிலும் நன்மை புரியாத பாவ ஜென்மம் அவன்.

சாரிபுத்ரனுக்கு கோபம் வந்துவிட்டது. எனவே, ‘உனக்கு விமோசனமே கிடையாது, மடத்தைவிட்டு வெளியே போ!’ என்று அவனைத் துரத்தினான். வெளியே வந்த அவன், இனி உயிர் வாழ்வதில் அர்த்தமில்லை என்று மதில்சுவரின் மேல் தலையை மோதி உடைத்து தற்கொலை செய்துகொள்ள முயன்றான். அப்போது அங்கே வந்த புத்தர் பதறிப்போய் அவனைத் தடுத்து நிறுத்தினார். நடந்ததைக் கேட்டறிந்த அவர், சாரிபுத்ரனிடம், ‘இவனை ஒரு வாரத்தில் தகுதியுடையவனாக ஆக்கிவிட முடியும்’ என்று சொல்லி, அவனைத் தன்னுடனே இருக்கச் சொல்லிவிட்டார். புத்தரின் கருணையைக் கண்டு கொலைகாரனின் ஆனந்தத்திற்கு அளவே இல்லை. ஒரே வாரத்தில் அமைதியும், அடக்கமும், சாந்தமும் தவழும் மனிதனாக மாறிவிட்டான்!

சாரிபுத்ரன் ஆச்சரியம் மேலிட, ‘இது எப்படி நிகழ்ந்தது’ என்று புத்தரிடம் கேட்டான். “சாரிபுத்ரா! நீ நல்லவன். பாவங்களின் சுமை, அதனால் ஏற்படும் தவிப்பு பற்றி உனக்கு அனுபவம் இல்லை. மேலும் நீ கடந்த காலத்தை மட்டுமே பார்த்தாய். இறந்த காலம் இறந்து போன காலமே. அது எதற்கு ஆகும்? எதிர்காலத்தை எண்ணிப் பார்க்க வேண்டும். அதை உருவாக்க வேண்டும். தன் பாவச் சுமையிலிருந்து, இறந்த காலத்திலிருந்து விடுபட இவன் பட்ட தவிப்புதான் இவனுக்கு விடுதலையைத் தேடித் தந்திருக்கிறது. நல்லவர்களை விடக் குற்றவாளிகளே விரைவில் பக்குவ நிலையை அடைய முடியும். தம்மை நல்லவர்களாக நினைத்துக் கொண்டு பிறரைத் தீர்ப்பிடுகிறவர்களுக்கு விமோசனமும், பரிபக்குவமும் எளிதில் சித்திப்பதில்லை” என்று கூறினார்.

ஒருவரைப் பற்றி நாம் கேள்விப்படுவதை எல்லாம், அவர் மீதான நமது விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்றார்போல் உள்ளத்தில் சேமித்து வைத்துக்கொள்கிறோம். உண்மையை அறிய ஒருபோதும் முயல்வதில்லை. இவ்வாறு, முன்சார்பு எண்ணங்களால் நிறைந்திருப்பவர்களால் உண்மையை கண்டுணர முடியாது. அவர்கள் தங்களது எண்ணங்கள், கொள்கைகள், கருத்துக்களை மட்டுமே வெளிப்படுத்திக் கொண்டே இருப்பார்கள். எனவே தாம் இருக்கின்றவாறு, தமது அபிப்ராயங்களின் அடிப்படையில் மற்றவர்களை தீர்மானிக்கின்றார்கள் (Subjective judgment), மற்றவர்கள் உள்ளவாறு அதாவது உள்ளதை உள்ளவாறு தீர்மானிப்பதில்லை (Objective judgment). ஆகவே, நம்முடைய தீர்மானங்கள் எல்லாம் நம்முடைய எண்ணங்களாலானது தான். இது நல்லது, கெட்டது, அழகானது, அருவருப்பானது, ஏற்றுக் கொள்ளக்கூடியது, ஏற்க இயலாதது என்று தீர்மானிப்பது மறைந்தால் நாம் கள்ளங் கபடமற்றவர்களாக மாறிவிடுவோம். விருப்பு வெறுப்பில்லாதவர் எதையும் தீர்மானிக்காத தன்மையுடையவர் ஆவார்.

‘குற்றமிழைத்தவனை உங்களில் ஒருவனாக அல்லாமல் வேறு யாரோ ஒருவன் போலவும், இந்த உலகிற்கு அழையாமல் வந்த அன்னியன் போலவும் கருதுகிறீர்கள்.... ஒரு துரோகம் செய்த மனைவியை நீங்கள் யாராவது விசாரணைக்குக் கொண்டு வந்தால், அவள் கணவன் தன் இதயத்தின் கனத்தைத் தராசில் நிறுத்துப் பார்க்கட்டும், தன் ஆன்மாவை அளந்து பார்க்கட்டும். தவறிழைத்தவரை சாட்டையால் அடிப்பவன், தவறுக்கு இரையாகுபவனின் ஆன்மாவுக்குள்ளும் பார்க்கட்டும்’ என்கிறார் கலீல் ஜிப்ரான்.

ஒரு கிராமத்தில் முகம்மதிய சூ∴பி ஞானி ஒருவர் சில்லரை சாமான்களை விற்று வந்தார். அங்குள்ள மக்கள் இவர் எதைப் பற்றியும் தீர்மானிக்க மாட்டார் என்பதை தெரிந்திருந்தார்கள். ஆகவே அவர்கள் பொருட்களை எடுத்துக் கொண்டு பொய்யான நாணயங்களைக் கொடுத்தனர். அவர் அதையும் ஏற்றுக்கொள்ளுவார். சில சமயங்களில் சிலர் பொருட்களை எடுத்தக் கொண்டு ‘நாங்கள் பணம் கொடுத்துவிட்டோம்’ என்று பொய் சொல்வார்கள். அதற்கும் அவர் ‘சரி’ என்று சொல்லி அவர்களுக்கு நன்றியும் கூறுவார். இவரைப் பற்றிக் கேள்விப்பட்டு பக்கத்து கிராமங்களிலிருந்தும் மக்கள் வந்து, பொருட்களை எடுத்துக்கொண்டு கள்ள நாணயத்தைக் கொடுப்பர். அவர், ‘இது தவறு’ என்று சொல்வதே இல்லை.

அந்த ஞானி மரணப்படுக்கையில் இருக்கையில், அவரது கடைசி வார்த்தைகள் இதுதான்: “ஓ கடவுளே! நான் எல்லாவிதமான நாணயங்களையும் ஏற்றுக்கொண்டேன். பொய்யான நாணயங்களையும் நான் மறுக்கவில்லை. நானும் ஒரு பொய்யான நாணயம்தான். என்னை எப்படிப்பட்டவன் என்று தீர்மானிக்காதீர்கள். நான் உம் மக்களைத் தீர்ப்பிடாதது போல் நீங்களும் என்னைத் தீர்ப்பிடாதீர்கள்” என்று வேண்டினார். இப்படிப்பட்ட மனிதனை கடவுள் எப்படி தீர்ப்பிட முடியும்?

“பிறர் குற்றவாளிகள் எனத் தீர்ப்பளிக்காதீர்கள், அப்போதுதான் நீங்களும் தீர்ப்புக்குள்ளாக மாட்டீர்கள்” (லூக் 6:37) என்கிறார் இயேசுநாதர். நாம் மிக எளிதாக பிறரைத் தீர்ப்பிடுகிறோம். அதே குற்றத்தை நாமும் செய்திருக்கிறோமா என சிந்திப்பதில்லை. நாம் பிறர் மீது ஒரு விரலைச் சுட்டிக் காட்டும்போது மூன்று விரல்கள் நம்மைச் சுட்டிக் காட்டிக் கொண்டிருக்கின்றன. எனவே, எப்போதும் பிறரை விமர்சித்தும், தீர்ப்பிட்டுக்கொண்டும் இருப்பதை விடுத்து, நிறை குறைகளோடு பிறரை ஏற்று அன்பு செய்து வாழ்வதே ஆனந்தம்.

வசந்தம் வீசும்...



22

# ஆன்மிகமும் பக்தியும்

Dr.Sr.M.லில்லி மரி ME, புதுச்சேரி.



நமது உறவுகளை முறித்து, நட்பை உதறித்தள்ளி, உடன் வாழ்பவர்களிடமும் மன வருத்தங்களை ஏற்படுத்துவது எப்போதும் பிறரிடம் குறை கண்டு அவர்களைத் திருத்த முயற்சி செய்வது. இதை மிக எளிதாகச் சொன்னால் திருந்த மாட்டார்கள், எனவே மிகைப்படக் கூறல் என்னும் முறைப்படி இயேசு பின்வரும் கேள்வியைக் கேட்கிறார்.

**“உங்கள் கண்ணில் இருக்கும் மரக்கட்டையைப் பார்க்காமல் உங்கள் சகோதரர் கண்ணில் இருக்கும் துரும்பை நீங்கள் கூர்ந்து கவனிப்பதேன்?** (மத் 7:3. லூக் 5:41)

நம் சொந்த தவறுகளைப் பார்ப்பதிலும் அவற்றை ஒப்புக்கொள்வதிலும் நாம் எவ்வளவு குருடர்களாக இருக்கிறோம்! இயேசு இந்தக் கேள்வியால் அதைச் சுட்டிக்காட்டுகிறார். மரக்கட்டை கண்ணில் நிற்க முடியுமா? ஆனால் முழு குருட்டுத் தன்மையைச் சித்தரிக்கிறது.

இயேசு பலவித குருடர்களைத் தாம் வாழ்ந்த சமுதாயத்தில் சந்தித்திருக்கிறார். அவர்களில் அடுத்தவர்களைத் திருத்துவதில் ஆர்வம் கொண்டவர்கள் ஒரு விதம். இன்னும் வேறுசில குருடர்களுக்குத் தங்கள் வர்ழ்வுக்குச் செல்லும் வழியே தெரியாது. அவர்கள் மற்றவர்களுக்கு வழிகாட்டுவர். அவர்களைக் குருட்டு வழிகாட்டிகள் என்று சாடியிருக்கிறார்.

இயேசுவின் கேள்வியில் பிறர் கண்ணில் இருக்கும் துரும்பை எடுப்பவர் அறுவைச் சிகிச்சை செய்யும் ஒருவித கண் மருத்துவர் எனலாம். பார்வையற்ற ஒருவர் கண் அறுவை சிகிச்சை செய்ய முடியுமா? இதை இயேசுவின் கேள்வியைவிட வேறுவிதமாகப் புரிய வைக்க இயலாது. அதிலும் இந்த மருத்துவருக்குத் தூரப் பார்வை போலும் அடுத்தவர் கண்ணில் இருக்கும் சிறு துரும்பும் தெளிவாகத் தெரிகிறது. ஆனால் தன் கண்ணில் உள்ள மரக்கட்டை தெரியவில்லை.

ஒரு முன்கோபக்காரரால் அடுத்தவர்களுடைய பொறுமை இழந்த சிறு வார்த்தைகளைக் கூட சுட்டிக்காட்ட முடியும்.

இதே வினா லூக்கா நற்செய்தியில் சற்று வித்தியாசமாகக் கேட்கப்பட்டுள்ளது:

**“உங்கள் சகோதரரிடம் “உங்கள் கண்ணில் இருந்து துரும்பை எடுக்கட்டுமா? என்று எப்படிக் கேட்கலாம்?** (லூக் 6:42)

கேட்கக் கூடாது என்பதுதான் அறிவுள்ள அனைவரின் பதிலாகவும் இருக்கும்.

**“பார்வையற்ற ஒருவர் பார்வையற்ற வேறு ஒருவருக்கு வழிகாட்ட இயலுமா? இருவரும் குழியில் விழுவாரல்லவா?”** (லூக் 6:39)

நமக்கு வாழும் வழியைக் காட்டுபவர்களைக் “குரு” என்றும் “ஆசான்” என்றும் அழைக்கிறோம். நமது நாட்டின் கல்வி முறை பழங்காலத்தொட்டே ஏட்டிலிருந்து கற்பதல்ல ஒரு நபரிடம் அதாவது குருவிடமிருந்து கற்பது. அப்படி வழிகாட்டுபவர் நன்கு சட்டங்களைக் கற்றவராக இருக்க வேண்டும் என்று இயேசு கூறவில்லை. ஆனால் பார்வையுள்ளவர்களாக இருக்க வேண்டும் என்று கூறுகிறார்.

பார்வையற்ற ஒருவர் வேறு ஒருவருக்கு வழிகாட்ட இயலுமா? இந்தக் கேள்விக்கும் பதில், “இல்லை” என்றுதான் வரும். இதுதான் பதிலை வரவைக்கும் இயேசுவின் போதனாமுறை. அடுத்து “இருவரும் குழியில் விழுவாரல்லவா?” இதற்கும் “ஆம்” என்று பதில் வரும். இவ்வாறு போதிக்கும் இயேசுவைச் சற்று உற்றுக் கவனித்துத் தியானித்தால் அவர் எப்படி மக்களின் சிந்தனையில் தாக்கம் செய்திருக்கிறார் என்பது விளங்கும். இவ்வாறு ரபிகளால் மக்களைத் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொள்ள முடியவில்லை. எனவே இயேசுவின் மீது பொறாமைப் பட்டனர்.

**“உங்களுள் எவராவது ஒருவர் அப்பத்தைக் கேட்கும் தம் பிள்ளைக்குக் கல்லைக் கொடுப்பாரா? அல்லது மீன் கேட்டால் பாம்பைக் கொடுப்பாரா?** (மத் 7:9-10)

செபம் என்பது நமக்குத் தேவையானதைக் கேட்கக் கையாளப்படும் ஒரு வழி.

கலிலேயாக் கடலோரம் வாழும் மக்களுக்கு முக்கிய உணவு அப்பமும் மீனும். உயிர் வாழ்வதற்குத் தேவையான இவற்றை ஒரு குழந்தை தன் தந்தையிடம் கேட்டால் தந்தை அதை மறுப்பாரா என்று சொல்லாமல் அதற்குப் பதிலாக கல்லையும் பாம்பையும் கொடுப்பாரா? என்று இயேசு கேட்கிறார். கல் அப்ப வடிவில் தோன்றுகிறது. பாம்பு மீன் வடிவில் தோன்றுகிறது. கல்லை உணவாகக் கொள்ள முடியுமா? பாம்பு உயிரைப் பறிக்கக் கூடியது. இவற்றை ஒரு தந்தை தன் பிள்ளைக்குக் கொடுப்பாரா? முட்டை கேட்டால் தேளைக் கொடுப்பாரா?

சில வேளைகளில் பிள்ளைகள் பாம்பைக் காட்டி மீன் என்று நினைத்துக்கொண்டு “எனக்கு இதுதான் வேண்டும்” என்று அடம்பிடிக்கலாம்.

முதலில் நாம் செபத்தில் யாராக இருந்துகொண்டு செபிக்க வேண்டும் என்று கற்பிக்கிறார். பிச்சைக்காரனாக அல்ல, வழிபோக்கனாக அல்ல, ஆனால் மகனாக, மகளாக.

செபிக்கக் கற்றுக்கொடுத்த இயேசு கேட்கச் சொல்லிவிட்டுக் கொடுக்காமல் இருப்பாரா?

தந்தையர்கள் கடவுளைப் பிரதிபலிக்கின்றனர். எனவே அவர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு நல்லதைத்தான் கொடுப்பார்கள். தந்தையருக்கு மெழுகு போன்ற இதயம் உண்டு. இது தந்தையர்களுக்குப் புரியும்.

நாம் செபத்தில் கேட்பதை எல்லாம் கடவுள் தருவதில்லை. நல்லது எதுவோ அதைத் தருகிறார்.

**பிள்ளை மீனைக் கேட்டால் உங்களுள் எந்தத் தந்தையாவது மீனுக்குப் பதிலாகப் பாம்பைக் கொடுப்பாரா? முட்டையைக் கேட்டால் அவர் தேளைக் கொடுப்பாரா?** (லூக் 11:11-12)

“தீயோர்களாகிய நீங்களே உங்கள் பிள்ளைகளுக்கு நற்கொடைகள் அளிக்க அறிந்திருக்கிறீர்கள். அப்படியானால் விண்ணகத் தந்தை தம்மிடம் கேட்போருக்குத் தூய ஆவியைக் கொடுப்பது எத்துணை உறுதி!” (லூக் 11:13) ஏராளமாக மீனும் முட்டையும் தருவார் என்று சொல்லவில்லை மாறாக தூய ஆவியாரைக் கொடுப்பார் என்கிறார்.

தொடரும்



# எதிர் நீச்சல்

– திரு. அல்போன்ஸ் மோசஸ்-புதுச்சேரி-9.

அந்த விவசாயி தன் நிலத்தில் விளைந்த நெல்லை மூட்டையாகக் கட்டி மாட்டு வண்டியில் ஏற்றிக் கொண்டு பக்கத்து ஊரில் நடைபெற்ற சந்தைக்குச் சென்று அங்கு விற்றுவிட்டு வீட்டிற்குத் தேவையான பொருட்களை வாங்கிக் கொண்டு மாலை நேரத்தில் வீடு திரும்பினான்.

வழியில் ஒரு அடர்ந்த காட்டினைக் கடக்க நேரிட்டது. மாலையும் மங்கி இரவைத் தொட்டது. அந்த நேரத்தில் மழையும் பெய்ய ஆரம்பித்தது. மழை நிற்கும் வரை அருகிலிருந்த ஆலமரத்தடியில் நின்று கொண்டான். மழை விட்டவுடன் பயணத்தைத் தொடர்ந்தான்.

ஆனால் சாலை சேறும் சகதியுமாக இருந்ததால் வண்டிச் சக்கரம் ஒரு பெரிய பள்ளத்தில் சிக்கிக் கொண்டது. அவனுக்கு என்ன செய்வதென்றேத் தெரியவில்லை. சேற்றிலிருந்து சக்கரத்தை எப்படி எடுப்பது என்று கவலைப்பட்டுக் கொண்டே எந்தவித முயற்சியும் செய்யாமல் யாராவது வந்தால் உதவிக்கு அழைத்து வண்டிச் சக்கரத்தைத் தூக்கி விடலாம் என்று நினைத்துக் கொண்டே நின்று கொண்டிருந்தான்.

அந்த வழியே ஒரு துறவி வந்தார். அவர் கிட்டே வந்ததும் ஐயா வண்டிச் சக்கரம் சேற்றில் மாட்டிக் கொண்டது. அதை வெளியே எடுக்கக் கொஞ்சம் உதவி செய்கின்றீர்களா? என்று கேட்டான். ஆனால் அவரோ நானோ வயதானவன். தொலை தூரம் நடந்து வந்ததால் அதிக களைப்போடு இருக்கின்றேன். என்னால முடியாது என்றார்.

மேலும், என்ன, அப்படியே நின்று கொண்டிருக்கின்றாய். இது கள்வர்கள் நடமாடும் பகுதி. கூட்டமாக வந்து கிடைக்கும் பொருட்களை கொள்ளையடித்துச் செல்வார்கள். சில சமயம் ஆட்களைக் கூட விட்டு வைக்க மாட்டார்கள் என்றார்.

துறவியின் பேச்சைக் கேட்ட விவசாயி மிகவும் பயந்து போனான். நமக்கு உதவ யாரும் வரப் போவதில்லை என்பதை புரிந்து கொண்ட விவசாயி பள்ளத்தில் சிக்கியிருந்த வண்டிச் சக்கரத்தைப் பிடித்து நாமே தூக்கி விடுவோம் என்று முயற்சி செய்தான். ஆனால் முடியவேயில்லை. தன் முழு பலத்தையும் சேர்த்து தூக்கிப் பார்த்தான். சக்கரம் சேற்றிலிருந்து வெளியே வந்தது.

இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த துறவி சிரித்துக் கொண்டே பார்த்தாயா முயற்சியே செய்யாமல் பிறர் உதவி நாடி ஏமாந்து போய்விட்டாய். நேரம் போனதுதான் மிச்சம். இந்த முயற்சியைத் துணிந்து முதலிலேயேச் செய்திருந்தால் இந்நேரம் உன் வீட்டிற்கேப் போய்ச் நேர்ந்திருப்பாய். துணிந்து செயல்பட்டால் வெற்றி தன்னால் வந்து சேரும் என்றார்.

வாழ்க்கையில் யாருக்குதான் பிரச்சனையில்லை. அனைவரும் ஏதோ ஒரு வகையில் அதை எதிர்கொண்டுதான் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். துணிந்தவனுக்குத் துக்கமில்லை.

# குருவும் சீடரும்

திரு. ஜெயராஜ் தானியேல்,
முத்தியால்பேட்டை, புதுவை-3



விடியற்காலை மூன்று மணியிலிருந்து சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்தது சுவாமி கருணானந்தா ஆசிரமம். சீடர்கள் ஒவ்வொருவரும் தமக்குரிய கடமைகளில் மூழ்கியிருந்தனர். சீடர்களை மூன்று வகுப்புகளாகப் பிரித்து பாடம் சொல்லிக் கொடுத்தார் குரு. முதல் வகுப்புக்கு "உயிரினம்" என்றும், இரண்டாவது "இடையினம்" என்றும், மூன்றாவது பிரிவுக்கு "முடியினம்" என்றும் பெயர் வைத்திருந்தார். ஒவ்வொரு வகுப்புக்கும் ஒரு சிறந்த மாணவரைத் தேர்வு செய்து அவர்களிடம் குழுவைக் கண்காணிக்கும் பொறுப்பை ஒப்படைத்திருந்தார். உயிரினம் என்ற பிரிவுக்கு ஒருவரை கண்காணிப்பாளராக நியமித்து அவருக்கு "கண்டேன்" என்றும், இடையினம் வகுப்புக் கானவரை "உண்டேன்" என்றும், முடியினத்துக்கானவரை "விண்டேன்" என்றும் பெயர் சூட்டியிருந்தார்.

ஆண்டுகள் பல உருண்டோடின. குருவுக்கு வயதாகிவிட்டபடியால் தலைமை சீடரைத் தேர்ந்தெடுக்க நினைத்தார். ஒரு நாள் மூன்று வகுப்புகளைச் சேர்ந்த மாணவர்களையும் ஒரு பெரிய ஆலமரத்தடியில் கூடச் செய்தார். மரத்தின் அடியில் நடுநாயகமாக இருந்த விரிப்பில் அமர்ந்தார் குரு,

"என்னுடைய இரண்டு கேள்விகளுக்கு யார் சரியான பதில் கூறுகிறாரோ அவர் தான் என் தலைமை சீடராகத் தகுதியானவர். அனைவரும் தயாரா?" என்று கேட்டார் குரு.

"அப்படியே ஆகட்டும், குருவே" என்றனர் சீடர்கள்.

நல்லது. முதல் கேள்வி. இந்த ஆசிரமத்தின் மூன்று வகுப்புகளுடைய பெயர்களின் பொருள் என்ன? இரண்டாவது கேள்வி. மூன்று பிரிவுகளின் கண்காணிப்பாளர்களுக்கு நான் சூட்டிய பெயர்களின் பொருள் என்ன?

ஒவ்வொருவரும் தத்தம் மனதில் தோன்றியதைக் கூறினார்கள். எவருடைய பதிலும் குருவுக்கு திருப்தியளிக்கவில்லை. கடைசியில் ஆசிரமத்துக்கு வந்து மூன்று மாதங்களே ஆன சீடர் ஒருவர் எழுந்து, "அடியேன் சொல்கிறேன், குருவே! உயிரினம் என்ற முதல் குழு நாங்கள் ஜடங்களல்ல என்பதை உணர்த்துகிறது. இடையினம் என்ற பிரிவு நாங்கள் இறைவனுக்கும் மனிதனுக்கும் இடைப்பட்டவர்கள் என்பதைக் குறிக்கிறது. முடியினம் என்ற கடைசி பிரிவு இறைவனால் முடிசூட்டப்பட பொருத்த மானவர்கள் என்று பொருள் கொள்ளப்படுகிறது. அடுத்து, கண்டேன் என்பவர் தாங்கள் கற்பித்ததைக் கண்டுணர்ந்து கொண்டவர், உண்டேன் என்றழைக்கப்படுபவர் தாங்கள் சுட்டியதைக் கண்டு, உண்டு ருசித்தவர். விண்டேன் என தங்களால் பெயர் சூட்டப்பட்டவர் முடிசூடத் தயார் நிலையில் உள்ளவர்களில் மலர்ச்சி பெற்றவர் என்பது என் சிற்றறிவுக்கு எட்டிய பொருள்" என்றார்.

அவருடைய பதிலில் திருப்தியடைந்த குரு அவரை அரவணைத்து, "ஞான மார்க்கத்தில் நீ தேர்ச்சி பெற்று விட்டாய். உன்னை எனது தலைமை சீடராக இறைவனின் அருளோடும் ஆசியோடும் நியமிக்கிறேன். இன்றிலிருந்து நீ என்னுடைய பொறுப்புகளை ஏற்று இந்த ஆசிரமத்தை நிர்வகித்து வழிநடத்துவாய்." திருவிவிலியத்தில் புனித லூக்கா சொல்வது போல "சீடர் குருவை விட மேலானவர் அல்ல. ஆனால் தேர்ச்சி பெற்ற எவரும் தம் குருவைப் போலிருப்பர்" என்று சொல்லி ஆசீர்வதித்தார்.

## என் மீட்பர் இயேசு இன்றும் உயிரோடிருக்கிறார்.

சகோ. A. ஆரோக்கியதாஸ்
திண்டிவனம்.

### தீய ஆவிகளும் இயேசுவை அறிந்துள்ளன

**மத் 8:28** இயேசு கதரேனர் வாழ்ந்த பகுதிக்கு வந்தபோது பேய்பிடித்த இருவர் கல்லறைகளி-ருந்து வெளியேறி அவருக்கு எதிரே வந்து கொண்டிருந்தனர் அவ்வழியே யாரும் போக முடியாத அளவுக்கு அவர்கள் மிகவும் கொடியவர்களாய் இருந்தார்கள். அவர்கள் "இறை மகனே, உமக்கு இங்கு என்ன வேலை? குறித்த காலம் வரும்முன்னே எங்களை வதைக்கவா இங்கே வந்தீர்?" என்று கத்தினார்கள்.

**லூக் 8:27** இயேசு கரையில் இறங்கியதும் அந்நகரைச் சேர்ந்த ஒருவர் அவருக்கு எதிரே வந்தார். பேய் பிடித்த அவர் நெடுநாளாய் ஆடை அணிவதில்லை. வீட்டில் தங்காமல் கல்லறையில் தங்கி வந்தார். இயேசுவைக் கண்டதும் கத்திக்கொண்டு அவர்முன் விழுந்து, இயேசுவே உன்னத கடவுளின் மகனே. உமக்கு இங்கு என்ன வேலை? என்னை வதைக்க வேண்டாம். என உம்மிடம் மன்றாடுகிறோம் என்று அவர் உரத்த குர-ல் கூறினார். தீய ஆவி அவரைப் பாலை நிலத்திற்கும் இழுத்துச் செல்லும், தன் பெயர் இலேகியோன் என்ற பல பேய்கள் அவருக்குள் புகுந்திருந்தன. தங்களை பாதாளத்துக்குள் போகப் பணிக்காமல் அங்கு மேய்ந்து கொண்டிருந்த பன்றிகளுக்குள் புகும்படி தங்களை அனுமதிக்க வேண்டி அவற்றுள் புகுந்து ஏரியில் பாய்ந்து வீழ்ந்து மூழ்கியது.

**தி.ப 3:6** எருசலேம் கோவி-ன் அழகுவாயி-ல் பிச்சைக் கேட்டுக்கொண்டிருந்த பிறவிலேயே கால் ஊனமுற்றிருந்தவரிடம், வேண்டுதல் செய்ய கோவிலுக்குச் சென்ற பேதுரு, அவரிடம் "வெள்ளியும் பொன்னும் என்னிடமில்லை. என்னிடம் உள்ளதை உமக்குக் கொடுக்கிறேன்" என்று சொல்- "நாசரேத்து இயேசு கிறிஸ்துவின் பெயரால் எழுந்து நடந்திடும்" என்று கூறி வலக்கையால் அவரை தூக்கிவிட்டார். அவர் குதித்தெழுந்து துள்ளி நடந்து அவர்களுடன் கோவிலுக்குள் சென்றார். 3:16 இயேசுவின் பெயரே அவருக்கு வலுவூட்டியது. அவர் பெயர் மீது கொண்டிருந்த நம்பிக்கையால் தான் இது நடந்தது. அவருக்கு முழுமையான உடல் நலனைக் கொடுத்தது.

திப 2:37,38 பேதுருவின் அருளுரையை கேட்டு மக்கள் உள்ளம். குத்தப்பட்டவர்களாய் பேதுருவைப் பார்த்து "நாங்கள் என்ன செய்யவேண்டும்" என்று கேட்டார்கள். பேதுரு அவர்களிடம் "நீங்கள் மனம் மாறுங்கள், உங்கள் பாவங்களி-ருந்து மன்னிப்பு பெற இயேசு கிறிஸ்துவின் பெயரால் திருமுழுக்கு பெற்று தூய ஆவியாரைக் கொடையாக பெறுங்கள்" என்றார்.

உரோமை 10:9 "இயேசு ஆண்டவர் என வாயார அறிக்கையிட்டு இறந்த அவரைக் கடவுள் உயிர்த்தெழ செய்தார் என நீங்கள் உள்ளூர நம்பினால் மீட்புப் பெறுவீர்கள்" என்றார்.

திப 7:59 அவர்கள் ஸ்தேவான் மீது கல்லெறிந்த போது அவர் "ஆண்டவராகிய இயேசுவே எனது ஆவியை ஏற்றுக்கொள்ளும். இந்த பாவத்தை இவர்கள் மேல் சுமத்தாதேயும்" என்று சொல்- உயிர்விட்டார்.

லூக் 23:42 இயேசுவோடு சிலுவையில் அறையப்பட்ட குற்றவாளிகளுள் ஒருவர் இயேசுவைப் பழித்துரைத்தான். ஆனால் மற்றவர் அவரைக் கடிந்துக்கொண்டு "நாம் தண்டிக்கப்படுவது முறையே. நம் செயல்களுக்கேற்ப தண்டனையை நாம் பெறுகிறோம். இவர் ஒரு குற்றமும் செய்யவில்லையே" என்று பதிலுரைத்து, "இயேசுவே, நீர் ஆட்சியுரிமைப் பெற்று வரும்போது என்னையும் நினைவிற்கொள்ளும் என்றார். அதற்கு இயேசு அவரிடம் நீர் இன்று என்னோடு பேரின்ப வீட்டில் இருப்பீர் என உறுதியாக உமக்குச் சொல்கிறேன்" என்றார்.

**1கொரிந் 15:17 கிறிஸ்து உயிருடன் எழுப்பப்படவில்லை என்றால் நாம் கொண்டிருக்கும் நம்பிக்கை பயனற்றதே.**

மத் 28:20 இதோ உலக முடிவுவரை எந்நாளும் நான் உங்களுடன் இருக்கிறேன் என்றார். கத்தோ-க்க தேவாலயங்களில்நற்கருணை பேழையில் அப்ப வடிவில் உயிருடன் ஆன்ம சரீரத்துடன் இருந்துக்கொண்டு பெருஞ்சுமை சுமந்து சோர்ந்திருப்பவர்களே எல்லாரும் என்னிடம் வாருங்கள் நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன் என கூறி அழைக்கிறார்.

திபா 50:15 துன்ப வேளையில் என்னைக் கூப்பிடுங்கள் உங்களைக் காத்திடுவேன். தி.பா 91:14 அவர்கள் என் பெயரை அறிந்துள்ளதால் அவர்களைப் பாதுகாப்பேன். அவர்கள் என்னை நோக்கி மன்றாடும் போது அவர்களுக்குப் பதிலளிப்பேன். அவர்களது துன்பத்தில் அவர்களோடு இருப்பேன். அவர்களைத் தப்புவித்து அவர்களைப் பெருமைப்படுத்துவேன்.

உரோமை 10:14 இயேச மீது நம்பிக்கை கொண்டிருந்தாலன்றி அவர்கள் எவ்வாறு இயேசுவை நோக்கி மன்றாடுவர். அறிவிப்பதைக் கேட்டால் தான் நம்பிக்கை உண்டாகும் கிறிஸ்துவைப் பற்றிய செய்தி அறிவிக்கப்பட்டால் தான் அதைக்கேட்க வாய்ப்புண்டு.

தொடரும்...



# தீரத் தியாகி

(புனித தேவசகாயம் வரலாறு)

(வெளியீடு: நெய்தல்வெளி, நாகர்கோவில்)

- Dr. **தீபக் தாமஸ்,** பல் மருத்துவர், புதுவை.



நீலகண்டனை
நிரம்ப பிடித்துவிட்டது
முத்தப்பருக்கு.

பின்
யாருக்குத்தான்
பிடிக்காது
அச்செல்வனை
சிஷ்யனாய் ஏற்க
சம்மதம் சொன்னார்
அவர்.

பிராமணருக்கும்
சத்திரியருக்கும்
மட்டுமே
கல்வி வாய்ப்பு
கனிந்திருந்த
காலமது.
ஏனைய
சமூகத்தினருக்கு
அது
எட்டாக்கனி.

வாசுதேவன் நம்பூதிரியின்
நற்பெயரால்
கிடைத்த
நல்வாய்ப்பு.

கிடைத்த வாய்ப்பை
கெட்டியாய்
பிடித்துக் கொண்டான்
நீலகண்டன்.
அதிர்ஷ்ட வாய்ப்பை
அடக்கத்துடன்
பயன்படுத்திக் கொண்டான்.

இளைய மன்னர்களுக்கும்
உயர்குல தோன்றல்களுக்கும்
மட்டுமே இடமளித்த
கரை கண்ட முத்தப்பரின்
கோட்டைவிளை சிலம்பச் சாலை
விதிவிலக்காய்
நீலகண்டனையும்
நெகிழ்ந்து
ஏற்று கொண்டது.

ஆயக்கலைகளையும்
அக்கறையோடு
கற்றுத் தந்தார்
முத்தப்பர்.
அதை விட
அக்கறையோடு
அவைகளை
கற்றுக் கொண்டான்
நீலகண்டன்.

தமிழ், மலையாளம்
வடமொழி, வேதாந்தம்
இலக்கணம், வர்ம சாஸ்திரம்
போர்ப்பயிற்சி என
என்ன உண்டோ
எல்லாம் கற்றுக் கொண்டான்
அவன். விரைவாய், வீரியமாய்.
பன்முக ஆற்ற-ல்
பகலவனாய்
பிரகாசித்தான்.

கரை கண்ட முத்தப்பர்
தீவிர கத்தோ-க்க கிறித்தவர்.
இயேசு பிரானை
எந்நேரமும் தொழுதவர்.
எனவே
கர்த்தரின் கருணையும்
எப்பொழுதும்
அவரிடம் காணப்பட்டது.

ஆண்டவன் செயலாய்
ஆசிரியரின் பாதிப்பு
அவரின்
அன்பு மாணவனாகிய
நீலகண்டனிடத்திலும்
சற்றே விழுந்தது.

அந்த பள்ளியில்
அறியாத வயதி-ருந்து
அழியாத துணைவராய்
நீலகண்டனுக்கு அமைந்தனர்
இரண்டு நண்பர்கள்,
அவர்கள்
தொம்மன் திருமுத்து மற்றும்



தொம்மை சின்னத்தம்பி
அண்ணாவி.

இம்மூன்று பேரும்
மூன்று முத்துக்களாய்
முத்துப்பரின் பள்ளியில்
விளங்கினார்கள்.
சிந்தனையிலும்
செய-லும்
ஒருவரை ஒருவர்
சிறப்பாய்
ஒத்திருந்தார்கள்.

அக்காலத்தில்
அந்நாட்டை
ஆண்டவர்
மன்னர் மார்த்தாண்ட வர்மா.

தொடரும்...

## 6-ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்: 31-08-1945



விண்ணில்: 05-08-2016

**திரு.A. சூசை**

*“உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வார்” (யோ.11:25)*

என்று உரைத்த இயேசுவே!

A. சூசை என்னும் உம் அடியாருக்கு நித்திய இளைப்பாற்றி அளித்து முடிவில்லாத ஒளியில் உம்மோடு சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

**அவர்களின் நினைவாக**
**மனைவி:திருமதி. J. ஜெஸி கிளாரா**
**மகன், மகள், மருமகள், மருமகன், பேரப்பிள்ளைகள், உறவினர்கள் மற்றும் நண்பர்கள்.**

## விண்ணக வாழ்வின் 22ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி



தோற்றம் : 16-09-1955

மறைவு : 05-08-2000

**திருமதி. P. அன்னமரி**

"உயிர்ப்பும் உயிரும் நானே, என்னில் விசுவாசம் கொள்பவர் இறப்பினும் வாழ்வார்" - (யோவான்.11:25)

இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக 9-8-2022 செவ்வாய்க்கிழமை மாலை 6.00 மணிக்கு கோவிலானூர், புனித கர்மேல் அன்னை ஆலயத்தில் நடைபெறும் திருப்ப-யில் பங்கேற்று இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக செபிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

பிரிவால் துயருறும்

கணவர் : R.**பால் பிரான்சிஸ்,** Rtd. H.M.
மகன்கள் : **P.** ஜெரால்டு, **P.** ஹென்றி
மகள் : **P.** அனித்தா
மருமகன் : **V.**ஜார்ஜ் பெர்னாண்டஸ்
மருமகள்கள் : **D.**சாந்தினி, **A.**சாந்தி சகாயராணி
மற்றும் பேரப்பிள்ளைகள்.

கோவிலானூர்.

## விண்ணக வாழ்வின் 8-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி



தோற்றம்: 14-08-1946

இறப்பு: 09-08-2014

**திரு. R. மரிய ஆல்பர்ட்**

## விண்ணக வாழ்வின் 8-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி



தோற்றம்: 29-09-1946

மறைவு: 11-06-2014

**திருமதி.J.மிஸ்லின் ஆல்பர்ட்**

"ஆண்டவரின் கைகளில் நீர் அழகிய மணிமுடியாக திகழ்வாய்" எசா.62:3

இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக 9-8-2022 செவ்வாய்க்கிழமை மாலை 6.00 மணிக்கு கோவிலானூர், புனித கர்மேல் அன்னை ஆலயத்தில் நடைபெறும் திருப்ப-யில் பங்கேற்று இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக செபிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

பிரிவால் வருந்தும்

**உடன்பிறந்தோர்:**

திரு. **R. பால் பிரான்சிஸ்**
அருட்திரு. **R. ஜோசப்ராஜ்**
திருமதி. **R.D. எலிசபெத்-சக்கரையாஸ்**
**மற்றும் பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.**

கோவிலானூர்.

---



**S. மேரி விக்டோரியா**

**தோற்றம்: 13-03-1944**
**மறைவு: 19-07-2022**

"ஆண்டவர் எனது நேர்மைக்கு உரிய பயனை எனக்களித்தார், என் மாசற்ற செயலுக்கு ஏற்ப கைமாறு அளித்தார்" – திபா 18:20

## விண்ணக வாழ்வின் 13ஆம் நாள் நினைவு

நித்திய பிதாவே! எங்கள் குடும்பத்தின் சுடர் ஒளியாய் இவ்வுலகில் வாழ்ந்து, தன் கடமைகளை மிக பொறுப்புடன் செய்து முடித்து எங்கள் நினைவை விட்டு எந்நாளும் அகலாமல் உம்மையே நாடி வந்திருக்கும் உம் அடியார் அவர்களின் ஆத்துமம் நித்திய சமாதானத்தில் இளைப்பாற்றியை அடைந்திட உயிர்த்தெழுந்த இயேசு கிறிஸ்துவின் பெயரால் மன்றாடுகிறோம்.

– 1கர்.மங்.திரி

இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக 31-7-2022 ஞாயிறு காலை 11.00 மணிக்கு கோவிலானூர், புனித கார்மேல் அன்னை ஆலயத்தில் திருப்ப- நிறைவேற்றப்படும்.

பிரிவால் வருந்தும்

சகோதரர்: அருட்திரு **S. அல்போன்ஸ்**
சகோதரி: **Sr. லாரன்ஸ் செல்வநாதன்**
**சகோதரிகள், பேரப்பிள்ளைகள் மற்றும் குடும்பத்தினர்.**

## விண்ணக வாழ்வின் 15-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி



தோற்றம்: 03-02-1965

மறைவு: 05-08-2007

**திரு. L. அந்தோணிராஜ்**

**"ஜீவியத்தில் உம்மை நேசித்தோம் மரணத்திலும் உம்மை மறவோம்"**

புதுவை ரெயின்போ நகர், புனித ஜான் மரிய வியான்னி ஆலயத்தில் 5-8-2022 வெள்ளிக்கிழமை மாலை 6.00 மணிக்கு திருப்ப- நிறைவேற்றப்படும்.

**பிரிவால் துயருறும்**
**தாய், தந்தை,**
**மனைவி, மகள்கள், சகோதரர்,**
**குடும்பத்தினர்கள்**
**மற்றும் உறவினர்கள்.**




# வயதான துறவியர், அர்ப்பண வாழ்வின் தாத்தாக்கள் பாட்டிகள்

ஜூலை 24, ஞாயிறு காலையில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், உரோம் நகரிலிருந்து கனடா நாட்டிற்கு தனது 37வது வெளிநாட்டுத் திருத்தூதுப் பயணத்தைத் தொடங்கியபோது, அப்பயணத்தில் தன்னோடு பயணம் மேற்கொண்ட பத்துக்கும் மேற்பட்ட நாடுகளின் ஏறத்தாழ எண்பது பன்னாட்டு செய்தியாளர்களுக்கு முதலில் வணக்கம் சொல்லி இஞ்ஞாயிறின் முக்கியத்துவம் குறித்தும் எடுத்துரைத்தார். “முதிர்வயதிலும் அவர்கள் பலனளிப்பர்” என்ற திருப்பாடல் 92ன் திருவசனத்தை மையப்படுத்தி, இஞ்ஞாயிறன்று, தாத்தாக்கள் பாட்டிகள், மற்றும், முதியோர் இரண்டாவது உலக நாள் சிறப்பிக்கப்பட்டதை முதலில் திருத்தந்தை நினைவுபடுத்தினார்.

இயேசுவின் தாத்தா பாட்டியான புனிதர்கள் அன்னா சுவக்கீன் விழாவுக்கு ஜூலை 26 முந்திய ஞாயிறன்று, அதாவது ஜூலை மாதம் நான்காவது ஞாயிறன்று தாத்தாக்கள் பாட்டிகள் உலக நாள் சிறப்பிக்கப்படுகிறது. இந்த உலக நாளை திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் 2021ம் ஆண்டு உருவாக்கினார்.

தாத்தாக்கள் பாட்டிகள் வேர்கள் போன்றவர்கள். அவர்கள் சமுதாயத்தின் கருவூலங்களாக, அனைத்தையும் முன்னோக்கி நடத்திச் செல்கின்றனர். இவர்கள், வரலாறு, மரபுகள், பழக்கவழக்கங்கள், மற்றும் ஏனைய விழுமியங்களை அடுத்த தலைமுறைகளுக்கு வழங்குபவர்கள். இவர்களோடு இளையோர் தொடர்பு வைத்துக்கொள்ள வேண்டும். இந்தப் பழக்கத்தை ஒரு மரத்திற்கு ஒப்பிட்ட திருத்தந்தை, மரமானது தன் வேர்களிலிருந்து சக்தியைப் பெற்று, அதனை மலர்கள் மற்றும் கனிகளாக வழங்குகின்றது. அதேபோல் முதியோர் மரங்கள் என்றால், இளையோர் அம்மரங்களின் மலர்கள் மற்றும் கனிகளாகும். மேலும், வயது முதிர்ந்த இருபால் துறவியர், அர்ப்பண வாழ்வின் தாத்தாக்கள் பாட்டிகள். அவர்களை மறைத்து வைக்க வேண்டாம். அவர்கள், ஒரு துறவறக் குடும்பத்தின் ஞானம். எனவே இளம் துறவியரும், நவ துறவியரும் அவர்களோடு தொடர்பு வைத்துக்கொள்ள வேண்டும். அவர்கள் வழங்கும் வாழ்வு அனுபவம், துறவு வாழ்வை முன்னோக்கி நடத்திச் செல்ல உதவுகின்றது.

நம் ஒவ்வொருவருக்கும் தாத்தாக்கள் பாட்டிகள் இருக்கின்றனர், அவர்களில் சிலர் இறைபதம் சேர்ந்துவிட்டனர், சிலர் உயிரோடு இருக்கின்றனர், இன்றைய நாளில் அவர்களை சிறப்பாக நினைவுகூர்வோம், நாம் முன்னோக்கிச் செல்வதற்கு இவர்கள் உதவுகின்றனர்.

**Published and Printed by** Very Rev. Msgr. A. Arulanandam **on behalf of Most Rev.** Dr. A. ANANDARAYAR, D.D.,D.C.L.,
Archbishop of Pondicherry & Cuddalore. Printed at Mission Press, 196, Cathedral Street, Puducherry - 605 001.
Published from Mission Press, 196, Cathedral Street, Puducherry-605 001. Editor: Very Rev. Msgr. A. Arulanandam. Manager : Very Rev. Msgr. A. Arulanandam.